
# செப். 17 - தந்தை பெரியார் 146-வது பிறந்த நாள்!

## நம்பிக்கை!

“நான் ஒரு எதிர் நீச்சல்காரன். என்ன காரணத்தாலோ நம் நாட்டு மக்களின் பெரும்பான்மையான அபிப்பிராயத்துக்கு நான் மாறுபட்டவனாக இருந்து வருகிறேன்.

பழைமையைப் பாராட்டுவது நமது மக்களுக்கு ஒரு பெருமையாகக் காணப்படுகிறது. நானோ பழைமைப் பித்தை வெறுக்கிறவனாக இருக்கிறேன். அதனாலேயே நான் வெகு பேர்களால் வெறுக்கப்படுகிறேன். ஆனாலும் அறிவாளிகள் சீக்கிரம் என் பக்கம் திரும்பிவிடுவார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது!”

- தந்தை பெரியார்




## தொண்டு!

“நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன்.


இதைச் செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினால், நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்.”

-தந்தை பெரியார்



## தந்தை பெரியார்–குருகுல மாணவர்கள்!







**19** ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டினை எண்ணிப் பார்த்தால் நமக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது.

எங்கும் மூட நம்பிக்கை நீக்கமற நிறைந்திருந்த காலம் அது.

பெண்கள் வீட்டிற்குள்ளே முடங்கிக் கிடந்த காலம் அது,

பெண்கள் அடுப்பூதுவதற்காகவே படைக்கப்பட்டவர்கள் என்று நம்பிக் கொண்டிருந்த காலம் அது.

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்று சொல்லிக் கொண்டிருந்த காலம் அது.

பெண்கள், பிள்ளைகளை பெறும் எந்திரம் என்று சொல்லிக் கொண்டிருந்த காலம் அது.

ஆண்கள் அடிமைகளாக - ஏன் கொத்தடிமைகளாக மிட்டா மிராசுதாரர்களுக்கு சேவகம் செய்த காலம் அது.

தெருக்களில் பட்டியலினத்து மக்கள் செருப்பு அணிந்து செல்ல தடை விதித்து இருந்த காலம் அது.

அது தடை என்று கூட சொல்ல முடியாது, நடைமுறை என்றே சொல்லலாம்.

தோளில் துண்டு அணியாமல் இடுப்புக்குக் கீழே துண்டு கட்டியிருந்த காலம் அது.

உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடு, இந்தியா முழுவதும் நிறைந்து இருந்த காலம் அது.

மூட நம்பிக்கைகளில் மக்கள் மூளையை சலவை செய்து வைத்திருந்தது ஒரு கூட்டம். அந்தக் கூட்டத்தினருக்கு பாடம் புகட்ட அல்ல, அடிமைப்பட்டு, தாழ்ந்து அடி பணிந்து கிடந்த மனிதனுக்கு இந்த உலகத்தில் வாழ்வதற்கு உனக்கும் சம உரிமை உண்டு, பெண் என்பவள் வீட்டிற்குள் முடங்கிக் கிடப்பவள் அல்ல, ஆணுக்கு அடிமை அல்ல , ஆணுக்கு நிகர் பெண் என்று சொல்வதற்கு எவருமில்லாத அக்காலத்தில் ஒரு விடிவெள்ளியாக, தமிழ்நாட்டிற்கு கிடைத்தவர் தான் தந்தை பெரியார் அவர்கள்!

தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவுப் பிரச்சாரத்தால் இன்றைக்கு தமிழ்நாட்டில் சாதி என்பது ஏட்டளவிலும் சொல்லளவிலும் தான் இருக்கின்றது. பெயரளவில்இல்லை.

ஆம் பெயருடன் சேர்த்து ஐயர் என்றும், ஐயங்கார் என்றும், முதலியார் என்றும், செட்டியார் என்றும், பிள்ளை என்றும், படையாச்சி என்றும், உடையார் என்றும் போட்டுக் கொண்டிருந்த காலம் இன்று மலையேறி விட்டது. இதற்கெல்லாம் காரணம் யார்? தந்தை பெரியார் அவர்கள்தான்.

பெரியாரின் தடி மூட நம்பிக்கைகளை அடித்து நொறுக்கியது. பெண்களை வீட்டிற்குள் இருந்து வெளியே கொண்டு வந்தது. நீயும் சாதிக்கப் பிறந்தவள் தான், நீயும் ஆணுக்கு நிகரானவள் தான், நீ குழந்தை பெறும் மிஷின் அல்ல, சாதிக்கப் பிறந்த பெண்!

என்று தனது 95 வயது வரை இறுதி மூச்சு வரை மூத்திரச் சட்டியை உடன் கொண்டு சென்று பகுத்தறிவுப் பிரச்சாரம் மேற்கொண்ட ஒருவர் உண்டென்றால் அவர்தான் தந்தை பெரியார் அவர்கள்!

தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் சுற்றிச் சுழன்று தந்தை பெரியார் பிரச்சாரம் செய்ததன் விளைவு, இன்றைக்கு பெண்கள் புகாத துறையே இல்லை என்று சொல்லலாம். அதுவும் தமிழச்சிகள் இல்லாத துறையும் இல்லை, இல்லாத நாடும் இல்லை என்கிற அளவிற்கு பெண்கள் இன்றைக்கு முன்னேறி இருக்கிறார்கள்.

ஒரு சாரார்க்கு மட்டும் கிடைத்த கல்வி, உயர் பதவிகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று எண்ணினார் தந்தை பெரியார்! கனவும் கண்டார்!

அவரது கனவுகளை நனவாக்கியவர்கள் தந்தை பெரியாரின் குருகுலத்து மாணவர்களான பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான்!

தந்தை பெரியார் அவர்களுடன் சிறுபிணக்கு ஏற்பட்டதின் விளைவுதான் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் மாபெரும் திராவிட இயக்கம் தோன்றி இருக்கிறது. எல்லாம் நன்மைக்கே என்பதற்கேற்ப இன்றைக்கு தமிழ்நாட்டின் விடிவெள்ளியாக தி.மு.கழகம் ஜொலித்துக் கொண்டிருக்கிறது.

பேரறிஞர்அண்ணா அவர்கள் ராபின்சன் பூங்காவில் 17.9.1949 ஆம் நாள் அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தை கொட்டும் மழையில் தொடங்கி வைத்தார்.

தந்தை பெரியார் அவர்களின் பிறந்த தினத்தன்று இந்த இயக்கத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கினார் என்று நாம் சிந்தித்தால்,அது தான் மாணவர்கள் குரு மீது வைத்து இருக்கும் மரியாதை, பாசம் என்பது மட்டுமல்ல; தமிழ்நாட்டிற்கு, நமக்கு எல்லாம் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் என்று எண்ணியது தான் இங்கே காரணமாக அமைந்திருக்கின்றது.

1935 ஆம் ஆண்டு திருப்பூரில் நடந்த செங்குந்தர் இளைஞர் மாநாட்டில் பெரியாரை முதல் முதலாக சந்தித்தார் அண்ணா. அப்போது முதல் பெரியார் அவர்களை அண்ணா அவர்கள் தலைவராக ஏற்றுக் கொண்டார். அந்தச் சந்திப்பு குறித்த நிகழ்வை பேரறிஞர் அண்ணா அவர்கள் தி.மு.கழகத்தின் தொடக்கவிழாவில் பெரியார். என்னைப் பார்த்து என்ன செய்கிறாய்? என்று கேட்டார்.

தொடர்ச்சி 6ஆம் பக்கம்